# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை : திரு.செ.தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 39 /2017**

திரு. அ. வனஜாமுனியன்,
எண்.5, தில்லை நகர்,
புவனகிரி தாலுகா,
கடலூர்–608 601. . . . மேல்முறையீட்டாளர்
(திரு. அ. வனஜாமுனியன்)

எதிர்

உதவி பொறியாளர்,
கடலூர் மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
6/14, D–1, விருத்தாச்சலம் மெயின் ரோடு,
மேல் புவனகிரி–608 601. . . . எதிர்மனுதாரர்

1) எஸ். திருநாவுக்கரசு, உதவி பொறியாளர்/புவனகிரி
2) ஆர்.ராஜேந்திரன், உதவி செயற் பொறியாளர்/பி.முட்லூர்

**கேட்புரை நாள் : 12–9–2017**

**ஆணை நாள் : 25.10.2017**

திரு. அ. வனஜாமுனியன், தில்லை நகர், புவனகிரி தாலுகா, கடலூர் அவர்களின் 19.05.2017 நாளிடப்பட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.39/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 12.9.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தமிழ்நாடு மின்சார வாரிய சட்டத்திற்கு புறம்பாக எனது RCC வீட்டுக்கு மிக அருகில் இழுக்கப்பட்டுள்ள கூடுதல் இரண்டு மின் கம்பிகளை அகற்றி மாற்றித்தருவதோடு சுமார் 12 வருடங்களாக எனக்கு மிகவும் கஷ்டத்தை ஏற்படுத்தி எனது RCC வீட்டினை மேலும் விரிவு படுத்தி கட்ட முடியாத நிலைக்கு தள்ளிய பூ. சாமிதுரை, AE, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவரது பணி சேவை குறைபாட்டினாலும், அலட்சியத்தினாலும் எனக்கு ஏற்பட்ட கஷ்டம், நஷ்டம், மனஉளச்சலுக்காக அவரிடமிருந்து ரூ.10 லட்சம் பணம் வாங்கித்தருவதோடு இந்த மனு மீது நடவடிக்கை எடுத்து எனக்கும், பூ. சாமிதுரை AE, அவர்களுக்கும் நேரடி விசாரணை நடத்தி எனது RCC வீட்டிற்கு மிக அருகில் இடையூராக உள்ள கூடுதல் இரண்டு மின்கம்பிகளை அகற்றி, மாற்றித்தரவேண்டி பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 2. வழக்கின் சுருக்கம்:

2.1 புவனகிரியிலுள்ள தில்லை நகரில் எனது மற்றொரு கூரை வீட்டுக்கு மின்சாரம் பெற்று 2002ம் ஆண்டு RCC வீடு கட்டி புதுமனை புகுவிழா நடத்தி வசித்து வரும்போது RCC வீட்டுக்கு அருகில் இரண்டு மின் கம்பிகள் இருக்கும்போதே எனக்கு தெரிவிக்காமல் தமிழ்நாடு மின்சார சட்டத்திற்கு முரணாக பழைய விரோதத்தினை மனதில் வைத்துக்கொண்டு பூ.சாமிதுரை AE, அவர்கள் எனது வீட்டிற்கு அருகில் டிரான்ஸ்பார்மர் (மின்மாற்றி) ஒன்று அமைத்து எனது RCC வீட்டிற்கு மிக அருகில் உயிர் சேதம் ஏற்படும் வகையில் கூடுதலாக இரண்டு மின் கம்பிகளை 12.4.2004 அன்று இழுத்துள்ளார். இது சம்மந்தமாக தமிழ்நாடு மின்சார உயர் அதிகாரிகளுக்கு பலமுறை கடிதங்கள் கொடுத்தும், புகார்கள் செய்தும் எந்த

நடவடிக்கையும் எடுக்காமல் எனது வீட்டிற்கு மிக அருகில் இடையூறாக இழுக்கப்பட்டுள்ள இரண்டு கூடுதல் மின் கம்பிகளை அகற்றாமல் மெத்தனம் காட்டி வருகிறார்கள்.

2.2 இது தொடர்பாக தனது 4.11.2016 நாளிட்ட தமிழ்நாடு மின் நுகர்வோர் குறைதீர் மன்ற தலைவர் அவர்களுக்கு அனுப்பிய மனுவிற்கு மன்றம் தனது 23.3.2017 நாளிட்ட ஆணையினை வழங்கியுள்ளது.

2.4 மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மன்றத்தின் தீர்வு</u>

3.1 கடலூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 23.3.2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*வழக்கு வினா-1*

*எதிர்மனுதாரர் தரப்பில் சேவை குறைபாடு ஏதும் உள்ளதா?*

*மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சங்கதிகளையும், மனுதாரர் தரப்பு ஆவணங்களையும், ஆராய்ந்து பார்க்கையில் மனுதாரருக்கு சொந்தமான வீட்டிற்கு முன்பு LT 3 Phase 5 Wire செல்வதாகவும், அந்த ஒயர் 2004இல் கூடுதலாக பொறுத்தப்பட்டதாகவும், அது மனுதாரின் வீட்டிற்கு அபாயகரமானதாக உள்ளதாகவும், அதனை தள்ளி வைக்க மனு கொடுத்தும் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், ஆகையால் இந்த புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது, எதிர் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரை சங்கதிகளையும் ஆவணங்களையும். பரிசீலித்த வகையில் மேற்படி மனுதாரருக்கும் பொறியாளர், பூ.சாமிதுரை என்பவருக்கும் ஏற்கனவே மின் இணைப்பு கொடுப்பது சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்ததாகவும், அதன்*

தொடர்ச்சியாக வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் அதன் தொடர்ச்சியாக மாநில குறைதீர் மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், அதன் தொடர்ச்சியாகவே இந்த புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மனுதாரர் கேட்டு கொண்டதற்கிணங்க மின் கம்பிகளை தள்ளி வைக்க இந்த எதிர்மனுதாரர் தயாராக உள்ளதாகவும், அதற்கு உரிய கட்டணத்தை பங்கீட்டு முறையில் மனுதாரர் செலுத்தும் பட்சத்தில் செய்து தரப்படும் என்று பதில் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அதனை ஏற்காமல் இந்த புகார் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஏற்புடையது அல்ல என்று எதிர் உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது,

இந்த புகார் மனு நிலுவையில் உள்ள போது இம்மன்றத்தால் புகார்தாரரின் வீட்டின் அருகே உள்ள மின் கம்பிகளை பொறுத்து ஆய்வறிக்கை கோரப்பட்டு அதன் அடிப்படையில் எதிர்மனுதாரர் தரப்பில் கூடுதல் ஆவணங்களாக 25.01.2017 தேதியிட்ட ஆய்வறிக்கை மற்றும் 14.02.2017 தேதியிட்ட வட்டாட்சியர் புவனகிரி அளித்த கடிதம் 16.02.2017 தேதியிட்ட செயல் அலுவலர் புவனகிரி அளித்த கடிதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பரிசீலித்து பார்க்கையில் மேற்படி LT 3 Phase 5 Wire மின் கம்பிகள் மனுதாரர் வீட்டிற்கும் இடைப்பட்ட தூரம் 90 செ.மீட்டராக உள்ளது எனவும், அதற்கு ஆதாரமாக புகைப்படமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆவணங்களை பரிசீலித்த வகையில் மனுதாரர் கூறுவது போல் பொறியாளர் பூசாமிதுரை வேண்டும் என்றே மனுதாரரின் வீட்டிற்கு அருகே மின்கம்பிகளை அமைத்தார் என்பதற்கு எவ்வித ஆதாரமோ அதனை மெய்ப்பிக்கும் வகையில் எந்தவித சாட்சியமோ, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை, மாறாக எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வட்டாட்சியர் மற்றம் புவனகிரி செயல் அலுவலர் ஆகியோரின் கடிதத்தினை பரிசீலித்து பார்க்கும் போது மேற்படி மனுதாரர் கட்டி உள்ள கட்டிடம் அனுமதி பெறாமலும், அந்த கட்டிடம் சட்டத்திற்கு புறம்பாகவும் கட்டப்பட்டுள்ளது என்றும், அதன் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது

என்றும், மேற்படி மின்கம்பிகள் அமைக்கப்பட்டுள்ள மின் கம்பம் பொது இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி ஆவணங்கள் வழியாக தெரியவருகிறது. ஆகவே மனுதாரரின் கூற்று ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை என்று தெரியவருகிறது. மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் மின்சார விதிகளின் அடிப்படையில் பங்கீட்டு முறையில் மின் கம்பிகளை மாற்றி அமைத்து தர முன்வந்த பொழுதும் மனுதாரர் அதனை ஏற்காமல் இந்த புகார் மனுவினை தாக்கல் செய்துள்ளதும், அந்த பங்கீட்டு செலவினை பொறியாளர், பூ,சாமிதுரையே ஏற்க வேண்டும் என்று கூறி உள்ளது மனுதாரருக்கு மேற்படி பொறியாளர், பூ,சாமிதுரையின் மேல் உள்ள காழ்ப்புணர்ச்சியையே காட்டுகிறது, மின்சார சட்ட விதிகளின்படி, மின் பாதையை மாற்றி அமைக்க வேண்டும் என்றால் அதை கோரும் நபர் பங்கீட்டு முறையில் செலவினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உள்ளதாக எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது. ஆகவே இம்மன்றம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சேவை குறைபாடும் உள்ளதாக மனுதாரர் நிரூபிக்க வில்லை என்று முடிவு காண்கிறது.

**வழக்கு வினா 2**

**மனுதாரர் கோரும் மின்பாதையை எதிர் மனுதாரரே மாற்றியமைக்க வேண்டுமா ?**

வழக்கு எழு வினா (1)ல் கண்டறியப்பட்ட தீர்வின் அடிப்படையிலும் மின்வாரிய சட்ட விதிகளின் அடிப்படையிலும் மனுதாரர் சட்டத்திற்கு உட்பட்டு அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டி உள்ள நிலையில் மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் 2000ம் ஆண்டே அந்த மின்பாதை அமைக்கப்பட்டுள்ளது என்று எடுத்துரைக்கப்பட்ட வகையிலும், அதற்கு பின்புதான் மனுதாரர் உரிய அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டி உள்ளதால் சட்டத்தின் அடிப்படையிலும் நியாயத்தின் அடிப்படையிலும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்கல் விதி தொகுப்பு விதி 5(6)ன் அடிப்படையிலும் பங்கீட்டு முறையில் மின்பாதையை மாற்றி அமைப்பதே சரியானதாக இருக்கும் என்று இம்மன்றம் கருதுகிறது. ஆகவே மனுதாரர் கோருவதுபோல் எதிர்மனுதாரர் மட்டுமே மின்பாதையை மாற்றி அமைக்க

*வேண்டும் என்ற கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று இவ்வழக்கு வினா மனுதாரருக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.*

***வழக்கு வினா 3***

***வேறு என்ன பரிகாரங்கள் மனுதாரருக்கு கிடைக்க கூடியது ?***

*வழக்கு எழு வினா 1 மற்றும் 2 மனுதாரருக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதால் இந்த மனுவின் அடிப்படையில் வேறு எந்த பரிகாரங்களும் மனுதாரருக்கு கிடைக்க கூடியது அல்ல என்று இந்த வழக்கு எழு வினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.*

*வழக்கு எழு வினா 1 முதல் 3 ல் கண்ட தீர்வின் அடிப்படையில் இம்மனு செலவுத்தொகையில்லாமல் தள்ளுபடி செய்யப்படுகிறது.*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>**

4.1 TNEB சட்டத்தில் ஒரு வீட்டுக்கு முன் 11 KV மின் அழுத்தமுள்ள கூடுதல் மின்கம்பிகள் அமைக்கப்படும்போது, 4 அடி தூரம் இருக்க வேண்டும் என்பதற்கு எதிராக எனது வீட்டு போர்ட்டிகோ மேல் கூடுதல் மின்கம்பிகள் அமைக்கப்பட்டதுதான் புகார்.

4.2 ஏனென்றால் 7.11.1997 புகார் மனு சம்மந்தமாக மாநில நுகர்வோர் ஆணையத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. எனது வீட்டிற்கு முன் LT 3 phase 5 wire line செல்கிறது என்று கூறுவது தவறு. எனது வீட்டு போர்ட்டிகோ மேல் 11 KV மின் அழுத்தமுள்ள கூடுதல் 2 மின் கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளது. மின்பாதைக்கும் எனது வீட்டிற்கும் இடைவெளி Horizontal 90 cm என்றும் Vertical தூரம் 1 mtr உள்ளது என்றும் தவறாக கூறியுள்ளார். அதாவது எனது RCC வீட்டு போர்டிகோ மேல் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் இரண்டு மின் கம்பிகளுக்கும், போர்டிகோவிற்கும் இடையில் எவ்வளவு தூரம் என்பதை குறிப்பிடவில்லை. 2004ம் ஆண்டு கூடுதலாக அமைக்கப்பட்ட இரண்டு மின்கம்பிகள் போர்டிகோ மேல் அமைக்கப்பட்டது என்பது எனது குற்றச்சாட்டு.

4.3 18.2.2017 நாளிட்ட கடிதத்தில் 13.3.2017ல் ஆஜராக கோரியிருந்த கடிதம் வந்தபின் எனது மகள் திருமணம் சம்மந்தமாக 11.3.2017 அன்று AE(PRO) அவர்களிடம் தொலைபேசி வாயிலாக 13.3.2017 அன்று வர இயலாது என்று கூறிவிட்டேன். இருந்தபோதும், எனக்கு வாய்ப்பு அளிக்காமல் எனது புகார் மனுவை SE தள்ளுபடி செய்துள்ளார்.

4.4 மனுதாரரின் மனுவின் சுருக்கம் என்ற தலைப்பில் எனது புகார் மனுக்களில் உள்ள பல முக்கியமான கருத்துக்ளை மறைத்து ஒருசில கருத்து புகார்களை மட்டும் அவரது தீர்ப்புரையில் கூறி 1வது எதிர்மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்புகூறி எனது மனுவை தள்ளுபடி செய்துள்ளார். தீர்ப்புரையின் பக்கம்–1 முதல் 9வரை கூறியுள்ளதை மறுக்கிறேன். மேலும், AE பூ. சாமிதுரை அவர்களின் சட்டவிரோத செயலால் 2004ம் ஆண்டு முதல் 2017ம் ஆண்டுவரை எனக்கு ரூ.10 லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்பது உண்மை மற்றும் பக்கம் 3ல் எதிர்மனுதாரர் தன் எதிர் உரை என்ற தலைப்பின் கீழ் பத்தி 1ல் கூறியுள்ள அம்சங்களை மறுக்கிறேன். அந்த சங்கதி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

4.5 திருமதி. மு. வனஜா க/பெ முனியன் ஈஸ்வரன் கோயில் தெரு, இப்பிரிவு அலுவலகத்தில் விண்ணப்ப தொகையான ரூ.10 ரசீது எண்.048656ன் படி செலுத்தியுள்ளதாகவும் மின்இணைப்பு காப்பு தொகை ரூ.800/– ரசீது எண்.029025ம் செலுத்தியுள்ளதாகவும் கூறியுள்ளது அப்பட்டமான பொய் ஏனென்றால் 7.11.1997ல் மின்இணைப்பு பெற விண்ணப்பம் கொடுத்தவுடன் வீட்டு ஒயரிங்குகளை ஆய்வு செய்யாமல் அதே தேதியில் எவ்வாறு மின்மீட்டருக்கு பணம் செலுத்த முடியும் என்பது எனது குற்றச்சாட்டு. மின்இணைப்பு விண்ணப்பத்திற்காக நான் 7.11.97ல் மின் அலுவலகத்தில் ரூ.10/– செலுத்தவுமில்லை ரசீது எண்.048656 எனக்கு தரவுமில்லை. 7.11.97ல் புவனகிரி மின் அலுவலகத்தில் காசாளராக இருந்த திரு. லட்சுமபதி என்பவர் ரூ.1000 பெற்றுக்கொண்டு ரூ.800/– க்கு மட்டும் ரசீது

எண்.029025 கொடுத்து மீதி ரூ.200/– திருப்பி எனக்கு வழங்கவில்லை என்பதுதான் எனது குற்றச்சாட்டு.

4.6 13.3.2017 தேதியின் நடுவரின் தீர்ப்புரையில் மின்இணைப்பு கொடுக்க எனது வீட்டிற்கு செல்லும்போது வீட்டில் திருமதி வனஜா இல்லை எனவும் வீடு முழுவதும் இடிந்த நிலையிலிருந்ததாகவும் மின்இணைப்பு பெற்றுக்கொள்ள மின் ஒயரிங் நீட்டிப்பு பணிகள் செய்யாத காரணத்தினாலும் மின் இணைப்பு கொடுக்கவில்லை என்றும் கூறுவது சட்டப்படி தவறு. எனது வீட்டில் மின் ஒயரிங் பணி செய்யாதிருந்தபோது எவ்வாறு மின்துறை அலுவலகத்தில் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது. மின் ஒயரிங் நீட்டிப்பு பணி செய்து மின்இணைப்பு பெற திருமதி. மு. வனஜா முன்வரவில்லை என கூறியிருப்பது முற்றிலும் தவறானது, பொய்யானது. ஏனென்றால் திருமதி மு. வனஜா வீட்டில் இல்லை, வீடு முழுவதும் இடிந்த நிலையில் இருந்திருந்தது என்பதற்கு சாட்சியமோ ஆதாரமோ கொடுக்கவில்லை. மற்றும் அது சம்மந்தமாக திருமதி. வனஜாவுக்கு எந்தவித அறிவிப்பு கடிதமும் மின்துறை அனுப்பவில்லை என்பது முக்கியமான குற்றச்சாட்டு. மேலும், சர்வே எண்.345/8ல் உள்ள காலி மனையில் கூரைவீடு கட்டுவதற்கு மு. வனஜா பெயரில் பேரூராட்சியில் அனுமதி (approval) பெறப்பட்டுள்ளது என்பது மிக முக்கியமாக குறிப்பிடத்தக்கது மற்றும் மின் ஒயரிங் பணிகள் செய்து முழுமையடையாத வீட்டிற்கு மின் மீட்டர் வைப்பதற்கு பணம் எவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டது என்ற சர்ச்சைக்கு தாங்கள்தான் முழுமையான தீர்வு கூறவேண்டும்.

4.7 மேலும், தீர்ப்புரையின் பக்கம் 4ல் மு. வனஜா க/பெ முனியன் அவர்கள் மேல் புவனகிரி தில்லை நகரில் புதிதாக கட்டப்போகும் வீட்டிற்கு மேற்கண்ட மின்இணைப்பை கேட்டுள்ளார் என்று பொய் கூறியுள்ளார்கள். அதாவது மேற்கண்ட மின்இணைப்பு என்பது எந்த மின்இணைப்பை குறிக்கிறது என்று கூறவில்லை. தில்லை நகரில் உள்ள புதிய இடம்

அ.வனஜா முனியன் த/பெ அய்யாகண்ணு பெயரில் 2000ம் ஆண்டு முதல் இன்றும் உள்ளது. புதிய இடத்திற்கு புதிய மின்இணைப்பு எண்.799 வழங்கப்பட்டுள்ளது. 7.11.1997 புகார் மனு சம்மந்தமாக FA 400/2012ன் படி மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது

4.8 மேலும், தீர்ப்புரையின் பக்கம் 5ல் அ. வனஜா முனியன் RCC விட்டு போர்ட்டிகோ மேல் LT 3 phase 2 wire line செல்லுகிறது என்பதற்கு மாறாக வீட்டுக்கு முன்பு LT 3 phase 5 wire line என்று மாற்றி கூறியுள்ளார். 2004ம் ஆண்டு முதல் மின்துறை உயர் அதிகாரிகளுக்கு பல புகார் அனுப்பி உரிய பலனில்லாததினால் மின் நுகர்வோர்குறைதீர்க்கும் மன்றத்தில் புகார் மனு கொடுத்தேன். RCC வீடு போர்ட்டிகோ மேல் செல்லும் கூடுதல் இரண்டு கம்பிகள் மின்துறை சட்டத்திற்கு புறம்பாக பூ. சாமிதுரை AE அவர்கள் என் மீதுள்ள தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியினால் வீட்டுக்கும் மின்கம்பிகளுக்கும் TNEB சட்டபடி 4 அடி தூரம் (125 மீட்டர்) இருக்க வேண்டும் என்ற சட்டமிருப்பது தெரிந்தே என்னை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற உள் நோக்கத்தில் கூடுதல் 2 மின்கம்பிகள் அமைத்துள்ளார்.

4.9 மின்துறை சட்டம் தெரிந்தும் அபாயம் ஏற்படும் வகையில் எனது RCC வீட்டு போர்டிகோ மேல் 11 கே.வி. மின்அழுத்தமுள்ள கூடுதல் 2 மின் கம்பிகள் அமைத்த குற்றத்தை செய்த பூ. சாமிதுரை மீது நடவடிக்கை எடுத்து சைடு ஆரம் போடுவதற்குரிய செலவுத்தொகையை அவரது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து மாற்றித்தரவும், 2004 முதல் எனக்கு ஏற்பட்ட செலவு அவரது தவறான பணி செய்கையால் எனக்கு வரக்கூடிய வருமானம், ஏற்பட்ட சம்பள இழப்பு மற்றும் மன உளைச்சலுக்குரிய பரிகாரம் ரூ.10 லட்சம் பெற்றுத்தர வேண்டுகிறேன்.

4.10 25.10.2017 அன்று TNEB AD B.முட்லூர் அவர்கள் எனது வீட்டின் முன்பு உள்ள தாழ்வழுத்த மின் பாதையை அதிகாரிகளுடன் வந்து கூட்டாய்வு செய்து கடைசி கம்பிக்கும் வீட்டு சுவற்றிற்கும் 90 செ.மீ. இடைவெளி உள்ளது என்று கூறுவது தவறு, அதில் புவனகிரி செயல்

அலுவலர் பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை விதிகளை மீறி கிரயம் பெற்றது என்றும், பேரூராட்சி கட்டிட வரைபட அனுமதி 24.7.2000ல் பெற்றுள்ளார் என்றும் பெறப்பட்ட அனுமதி தவறு. இது தொடர்பாக தற்பொழுது சென்னை உயர்நீதிமன்றத்தில் SA NO.1226/2013 படி வழக்கு நிலுவையில் உள்ளது என்று புவனகிரி செயல் அலுவலர் கடிதம் கொடுத்துள்ளதாக கூறியுள்ளார். அந்த கடித நகல் எனக்கு தரவில்லை . புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் நான் வீடு கட்டுவதற்கு அனுமதி வழங்க கேட்ட இடத்தையும் வரைபடத்தையும் தீர ஆய்வு செய்த பின்தான் வீடுகட்ட அனுமதி எனக்கு 24.7.2000ல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் வனஜாமுனியன் தில்லை நகரில் கட்டியுள்ள வீட்டின் முன் உள்ள மின்கம்பம் பொதுக் தெருவில் அமைந்துள்ளது என புவனகிரி வட்டாட்சியர் கொடுத்த கடித நகல் எனக்கு தரவில்லை.

**5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>**

5.1 திருமதி. மு. வனஜா க/பெ முனியன், ஈஸ்வரன் கோயில் தெரு, மேல்புவனகிரி அவர்களின் வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி கடந்த 7.11.1997ம் ஆண்டு இப்பிரிவில் விண்ணப்ப தொகையான ரூ.10 ரசீது எண்.048656, நாள் 7.11.1997 செலுத்தியுள்ளார்கள். மின்இணைப்பு காப்பு தொகையான ரூ.800 ரசீது எண்.029025, நாள் 7.11.1997 செலுத்தியுள்ளார்கள். மின்இணைப்பு கொடுக்க மீட்டர் வாங்கி மின்இணைப்பு கொடுக்க செல்லும் போது வீட்டில் திருமதி. மு. வனஜா அவர்கள் இல்லை. மேலும் வீடு முழுவதும் இடிந்த நிலையில் இருந்ததாலும் மின் இணைப்பு பெற்றுக் கொள்ள மின்இணைப்பு மின் ஒயரிங் நீட்டிப்பு பணிகள் செய்யாத காரணத்தினாலும் மின்இணைப்பு கொடுக்கப்படவில்லை. மேலும், மின்ஒயரிங் நீட்டிப்பு பணிகள் செய்து மின்இணைப்பு பெற திருமதி. மு. வனஜா அவர்கள் முன் வரவில்லை.

5.2 பிறகு திருமதி. வனஜா க/பெ முனியன் அவர்கள் மேல் புவனகிரி தில்லை நகரில் புதியதாக கட்டபோகும் வீட்டிற்கு மேற்கண்ட மின்இணைப்பை கேட்டுள்ளார்கள். ஆனால், புதிய இடம்

திரு. அ. முனியன் த/பெ அய்யாகண்ணு அவர்கள் பெயரில் இருந்த காரணத்தால் புதிய இடத்திற்கு அந்த மின்இணைப்பு வழங்கப்படவில்லை. பின் மின்இணைப்பை ரத்து செய்து மின் அளவி பண்டக சாலையில் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. திருமதி. மு. வனஜா அவர்கள் மின் இணைப்பு செலுத்திய தொகையை கேட்டு அப்போது கடிதம் கொடுக்கவில்லை.

5.3 இந்த நிலையில் கடந்த 15.6.2005ல் திரு. அ. வனஜாமுனியன் த/பெ அய்யாகண்ணு ((வனஜாவின் கணவர்) தில்லை நகர் அவர்கள் மேற்பார்வை பொறியாளர் கடலூர் அவர்களிடம் திருமதி. மு. வனஜா அவர்களின் மின்இணைப்பு வேண்டி செலுத்திய தொகைக்கு வட்டியுடன் கேட்டு மனு கொடுத்துள்ளார்கள். அதற்கு திரு. அ. வனஜாமுனியன் அவர்களுக்கு திருமதி. வனஜா அவர்களின் மின்இணைப்புக்கு செலுத்திய ஒரிஜினல் ரசீது இணைத்து கடிதம் கொடுத்தால் செலுத்திய காப்புத்தொகை திரும்ப கிடைக்க ஆவண செய்யப்படும் என்று கடிதம் கொடுக்கப்பட்டது. ஆனால், திருமதி. மு. வனஜா அவர்களிடம் இருந்து கடிதம் பெறப்படவில்லை.

5.4 இந்த நிலையில் திரு. அ வனஜாமுனியன் அவர்கள் மாநில நுகர்வோர்குறைதீர் மன்றத்தில் மனு கொடுத்துள்ளார்கள். அந்த மனு பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண்.SR No.67/07 ஆகும். FA 600/07 ஆகும். மேற்கண்ட வழக்கை மாநில நுகர்வோர் நீதிபதி மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு 22.8.2008 அன்று அனுப்பியுள்ளார்கள். பின் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு எண்.56/2009 ஆகும். இந்த வழக்கானது கடந்த 28.12.2010ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தது. இருதரப்பு வாதங்களையும் கேட்டு கடந்த 12.1.2011 ந் தேதி புகார்கள் மனு தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

5.5 மேலும், திரு. மு. வனஜாமுனியன் அவர்கள் மாநில நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார். அந்த மனு பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண்.FA.SR.

NO.2087/2011 CMP NO.148/2012 ஆகும். பின் மாநில நுகர்வோர்குறைதீர் மன்றத்தில் பதிவுசெய்யப்பட்ட வழக்கு எண்.400/2012 ஆகும். தற்போது மாநில நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. வழக்கு எண்.400/2012 கடைசியாக விசாரணைக்கு வந்த தேதி 24.4.2017ஆகும். அடுத்தகட்ட விசாரணை தேதி 12.7.2017 ஆகும்.

5.6 திருமதி. வனஜா க/பெ முனியன் அவர்கள் மின்இணைப்பு கேட்டு 7.11.1997 ஆண்டு விண்ணப்பம் கொடுத்தபோது பொறிஞர் திரு. டி. ஜோதிமணி அவர்கள் தான் புவனகிரி பிரிவு அலுவலகத்தில் பணி புரிந்தார்கள். தற்போது வயது மூப்பின் காரணமாக பணி ஓய்வு பெற்றுவிட்டார். பொறிஞர் திரு. சாமிதுரை 3.12.2003 ஆண்டு தான் புவனகிரி பிரிவு அலுவலகத்தில் பணிஏற்பு செய்துள்ளார். திருமதி. வனஜா க/பெ முனியன் அவர்கள் மின்இணைப்பு கேட்டு 7.11.1997ம் ஆண்டு விண்ணப்பம் கொடுத்தப்போது பொறிஞர் திரு. பூ. சாமிதுரை அவர்கள் அப்போது புவனகிரி பிரிவு அலுவலகத்தில் பணி புரியவில்லை.

5.7 மேலும், திரு. அ. வனஜாமுனியன் தில்லை நகர் அவர்கள் அவரது வீட்டிற்கு முன்பு LT 3 phase 5 wire line செல்லுகிறது என்றும் அது போதிய இடைவெளி இல்லை என்று மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் புகார் அளித்துள்ளார். அந்த புகாரின் பேரில் மேற்கண்ட இடத்தை ஆய்வு செய்தபோது அவரது வீட்டிற்கு முன்பு LT 3 phase 5 wire line செல்லுகிறது. அந்த தாழ்வழுத்த மின்பாதை neutralக்கும் வீட்டிற்கும் உள்ள இடைவெளி (Horizontal) தூரம் 90 cm மற்றும் (vertical) தூரம் 1 Mtr உள்ளது.

5.8 மேலும், திரு. வனஜாமுனியன் தில்லை நகரில் கட்டப்பட்டுள்ள வீட்டிற்கு அனுமதி பெறப்பட்டுள்ளதா என்று விபரம் செயல் அலுவலர் புவனகிரி பேரூராட்சி அவர்களிடம் கோரப்பட்டது. அதற்கு புவனகிரி செயல் அலுவலர் அவர்கள் (திரு. வனஜாமுனியன் அவர்கள் தில்லை நகரில் உள்ள பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் விதிகளை மீறி கிரயம் பெற்றது மட்டுமல்லாமல் இப்பேரூராட்சிக்கு கட்டிட வரைபட அனுமதி பெறுவதற்காக

வழங்கப்பட்ட வரைபடத்தில் பிளாட் 1358 என பதிவு செய்து பேரூராட்சி மூலம் 24.7.2000ல் அனுமதி பெற்றுள்ளார். பெறப்பட்ட அனுமதி தவறு என்றும் இது தொடர்பாக வழக்கு எண்.10/2003 மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சிதம்பரத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்று செயல் அலுவலர் பேரூராட்சி புவனகிரி அவர்கள் தெரிவித்துள்ளார்.

5.9 வட்டாட்சியர் புவனகிரி அவர்களுக்கு திரு. வனஜாமுனியன் தில்லை நகரில் கட்டி உள்ள வீட்டின் முன்பு மின்கம்பம் பட்டாவில் உள்ளதா அல்லது பொது பாதையில் உள்ளதா என்று ஆய்வு செய்து தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்கு வட்டாட்சியர் அவர்கள் திரு. வனஜாமுனியன் தில்லை நகரில் உள்ள கட்டி உள்ள வீட்டின் முன்பு உள்ள மின்கம்பம் பொது தெருவில் அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

5.10 திரு. அ. வனஜாமுனியன் அவர்கள் தாழ்வழுத்த மின்பாதை மாற்றி அமைப்பதற்கு விண்ணப்பம் கொடுத்தால் பங்களிப்பு முறையில் மதிப்பீடு தயாரித்து மேல் அனுமதி பெற்று அனுமதி தொகையை திரு. அ. வனஜா முனியன் அவர்கள் செலுத்தினால் அதற்கு பணி ஆணை அனுமதி பெற்று சைடு ஆறாம் போட்டு தாழ்வழுத்த மின்பாதையை போதிய இடைவெளி அமைத்து வழங்கப்படும் என்றும் இந்த எதிருரையில் மின்வாரியம் சார்பில் எடுக்கப்பட்ட சட்டநிலைபாட்டுக்கு பாதிப்பு இல்லாமல் மனுதாரரின் மின்பாதை மாற்ற கோரிக்கை மின்வாரிய சட்டதிட்டத்திற்கு உட்பட்டு நிறைவேற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

5.11 இந்த புகார் சம்மந்தமாக நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றம் கூட்டம் தலைவர் மேற்பார்வை பொறியாளர் கடலூர் மின்சார அலுவலகத்தில் நடைபெற்றது. மின்வாரிய சட்ட விதிகளின் அடிப்படையிலும், மனுதாரர் சட்டத்திற்கு உட்பட்டு அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டி உள்ள நிலையில் மேலும் எதிர்மனுதாரர் தரப்பில் 2000ம் ஆண்டே அந்த மின்பாதை அமைக்கப்பட்டுள்ளது என்று எடுத்துரைக்கப்பட்ட வகையிலும் அதற்கு பின்புதான் மனுதாரர்

உரிய அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டி உள்ளதால் சட்டத்தின் அடிப்படையிலும் நியாயத்தின் அடிப்படையிலும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்கல் விதி தொகுப்பு விதி 5(6)ன் படி சரியானதாக இருக்கும்.

**6. மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:**

**6.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 23.5.2017 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

**6.2** மேல்முறையீட்டாளர் திரு. அ. வனஜா முனியன் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

**6.3** எதிர்மனுதாரர் சார்பில் திரு. எஸ். திருநாவுக்கரசு, உதவி பொறியாளர்/புவனகிரி மற்றும் ஆர்.ராஜேந்திரன், உதவி செயற் பொறியாளர்/பி.முட்லூர் ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

**7. கேட்புரை நாளில் மேல்முறையீட்டாளர் எடுத்துரைத்த வாதங்கள்**

**7.1** மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார். மேலும் தன்னுடைய எழுத்துப்பூர்வமான வாதுரையையும் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்தார்.

(i) இந்த வழக்கு சம்மந்தமாக சுமார் 60 ஆவணங்களை உள்வாங்கியது இதில் எனது ஆவணங்கள் 33 மின் வாரியம் சம்மந்தமாக சுமார் 27 ஆவணங்கள் அடங்கியது. ஆனால், இதில் ஏற்கெனவே தங்களுக்கு 3.10.2007, 10.8.2010, 4.11.2016, 2.1.2017, 27.1.2017 மற்றும் 23.3.2017 தேதிகளிட்ட 6 வகையான கடித நகல் இணைத்து 1வது மேல்முறையீட்டு மனு அனுப்பியுள்ளேன்.

(ii) தற்போது இந்த அபிடவிட்டில் கூறியுள்ள 13 வகையான மனுக்கள் தங்கள் வசமே உள்ளது. மேலும், இன்று தங்கள் வசம் எதிரி பூ. சாமிதுரையால் எனது வீட்டு போர்டிகோமேல் மின்துறை சட்டவிரோதமாக வீட்டிற்கு இடையூராகவும், மிக அருகிலும் அமைக்கப்பட்ட மின்கம்பம் மற்றும் கூடுதல் மின் கம்பிகளின் கலர் போட்டோக்கள் 4 தாக்கல் செய்கிறேன். இது சம்மந்தமாக பல ஆண்டுகள் அலைந்து எனது பணிக்கு விடுப்பு போட்டு கஷ்டப்பட்டுள்ளேன். ஆனால், இதுவரை மின் குறைகளை நீக்கவில்லை.

(iii) தமிழ்நாடு மின்வாரிய சட்ட விதிகளுக்கு விரோதமாக எனது கிரய மனையில் மின்கம்பம் நட்டு, RCC வீட்டு போர்டிகோ மேல் கூடுதல் மின் கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்த தற்போது விசாரணையில் நான் கொடுத்த நான்கு கலர் போட்டோக்களை பார்த்தாலே உண்மை தெரியும். மேலும், ஏற்கனவே தங்களிடம் கொடுத்துள்ள 27.1.2017 தேதியிட்டு மின்துறை அதிகாரிகள் கொடுத்த ஆய்வறிக்கையை ஆய்வு செய்தால் சட்டவிரோதமாகவும் எனக்கு பாதகமாகவும் எதிரி பணி செய்துள்ளார் என்பது உறுதிப்படும்.

(iv) ஏற்கனவே தாங்கள் எனக்கு கொடுத்த 24.5.2016, 10.5.2016, 29.5.2017 தேதியிட்ட கடிதங்களுக்கு மின்துறை அதிகாரிகள் நேர்மை தவறி சட்டவிரோதமாக தீர்ப்பும் பதிலும், கொடுத்துள்ளார்கள். தற்போது கூட எதிரி பூ. சாமிதுரை, உதவி பொறியாளர் வராமலே விசாரணை நடைபெறுவது சட்டவிரோதமாகும். மேலும், 2.9.2017ல் நான் கொடுத்த இமெயில் கடிதத்திற்கு எனக்கு பாதகமாக மின்துறையில் உள்ள சட்டத்தை தேடி கண்டுபிடித்து பதில் மெயில் கொடுத்துள்ளீர்கள் என்பது சட்டவிரோதம்.

(v) எனவே, தங்களிடம் கொடுத்த 1வது மேல்முறையீட்டு மனுவுடன் இணைத்து கொடுத்த ஆவணங்கள் மற்றும் இன்று நான் கொடுக்கும் கலர் போட்டோ ஆவணங்களை

நன்றாக ஆய்வு செய்து சுமார் 14 ஆண்டுகளாக எதிரி பூ. சாமிதுரை அவர்களால் ஏற்படுத்தப்பட்ட மின்குறைகளை நீக்கி கொடுத்து இத்தனை ஆண்டு காலம் கஷ்டப்பட்டு வந்த எனது மனஉளைச்சலுக்காக எனது மனுவில் கூறியுள்ள தொகையை வழங்க ஆவண செய்ய உத்தரவிட வேண்டும். தவறினால் இந்த வழக்கு முடியும் வரை எதிரிகள் பணி ஓய்வு பெற்றால் அவரது பணி ஓய்வு பணப்பலன்களை அவர்களுக்கு வழங்கக்கூடாது என பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

8. <u>கேட்புரை நாளில் எதிர்மனுதாரர் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர் தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார். மேலும் கேட்புரை நாளில் கீழ்க்கண்ட வாதங்களை எடுத்துரைத்தார்.

8.2 மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு கேட்டு 7.11.1997 ஆண்டு விண்ணப்பம் கொடுத்தபோது பொறிஞர் திரு. டி. ஜோதிமணி அவர்கள் தான் புவனகிரி பிரிவு அலுவலகத்தில் பணி புரிந்ததாகவும் தற்போது வயது மூப்பின் காரணமாக பணி ஓய்வு பெற்றுவிட்டார் எனவும் தெரிவித்தார். பொறிஞர் திரு. சாமிதுரை 3.12.2003 ஆண்டு தான் புவனகிரி பிரிவு அலுவலகத்தில் பணிஏற்பு செய்துள்ளார். திருமதி. வனஜா க/பெ முனியன் அவர்கள் மின்இணைப்பு கேட்டு 7.11.1997ம் ஆண்டு விண்ணப்பம் கொடுத்தப்போது பொறிஞர் திரு. பூ. சாமிதுரை அவர்கள் அப்போது புவனகிரி பிரிவு அலுவலகத்தில் பணி புரியவில்லை என்றும் தெரிவித்தார்.

8.3 மேலும், மேல்முறையீட்டாளர் அவரது வீட்டிற்கு முன்பு LT 3 phase 5 wire line செல்லுகிறது என்றும் அது போதிய இடைவெளி இல்லை என்று மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் புகார் அளித்துள்ளார். அந்த புகாரின் பேரில் மேற்கண்ட இடத்தை ஆய்வு செய்தபோது அவரது வீட்டிற்கு முன்பு LT 3 phase 5 wire line செல்லுகிறது. அந்த தாழ்வழுத்த மின்பாதை

neutralக்கும் வீட்டிற்கும் உள்ள இடைவெளி (Horizontal) தூரம் 90 cm மற்றும் (vertical) தூரம் 1 mtr உள்ளது.

8.4 மேலும், வட்டாட்சியர் புவனகிரி அவர்களுக்கு திரு. வனஜாமுனியன் தில்லை நகரில் கட்டி உள்ள வீட்டின் முன்பு மின்கம்பம் பட்டாவில் உள்ளதா அல்லது பொது பாதையில் உள்ளதா என்று ஆய்வு செய்து தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்கு வட்டாட்சியர் அவர்கள் திரு. வனஜாமுனியன் தில்லை நகரில் உள்ள கட்டி உள்ள வீட்டின் முன்பு உள்ள மின்கம்பம் பொது தெருவில் அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

8.5 திரு. அ. வனஜாமுனியன் அவர்கள் தாழ்வழுத்த மின்பாதை மாற்றி அமைப்பதற்கு விண்ணப்பம் கொடுத்தால் பங்களிப்பு முறையில் மதிப்பீடு தயாரித்து மேல் அனுமதி பெற்று அனுமதி தொகையை திரு. அ. வனஜா முனியன் அவர்கள் செலுத்தினால் அதற்கு பணி ஆணை அனுமதி பெற்று சைடு ஆறாம் போட்டு தாழ்வழுத்த மின்பாதையை போதிய இடைவெளி அமைத்து வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

8.7 மேலும், மின்வாரிய சட்ட விதிகளின் அடிப்படையிலும் மனுதாரர் சட்டத்திற்கு உட்பட்டு அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டி உள்ளார். மேலும் அந்த மின்பாதை அமைக்கப்பட்டுவிட்ட பின்புதான் மனுதாரர் உரிய அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டி உள்ளதாகவும் தெரிவித்தார்.

**9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

9.1 மேல் முறையீட்டாளர் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

1) தமிழ்நாடு மின்சார வாரிய சட்டத்திற்கு புறம்பாக அவரது RCC வீட்டுக்கு மிக அருகில் இழுக்கப்பட்டுள்ள கூடுதல் இரண்டு மின் கம்பிகளை வாரிய செலவில் அகற்றி மாற்றித்தரவேண்டும்.

2) உரிமதாரரின் பணி சேவை குறைபாட்டினாலும், அலட்சியத்தினாலும் மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்ட கஷ்டம், நஷ்டம், மனஉளச்சலுக்காக ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்.

10. <u>கோரிக்கை ஒன்றிற்கான தீர்வு</u> –

**10.1 மேல்முறையீட்டாளர் கீழ்கண்ட வாதங்களை முன்வைத்துள்ளார்–**

10.2 TNEB சட்டத்தில் ஒரு வீட்டுக்கு முன் 11 KV மின் அழுத்தமுள்ள கூடுதல் மின்கம்பிகள் அமைக்கப்படும்போது, 4 அடி தூரம் இருக்க வேண்டும் என்பதற்கு எதிராக எனது வீட்டு போர்ட்டிகோ மேல் கூடுதல் மின்கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளது மற்றும் மின்பாதைக்கும் எனது வீட்டிற்கும் இடைவெளி Horizontal 90 cm என்றும் Vertical தூரம் 1 mtr உள்ளது என்றும் கூறியுள்ளது தவறாகும். RCC வீட்டு போர்டிகோ மேல் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் இரண்டு மின் கம்பிகளுக்கும், போர்டிகோவிற்கும் இடையில் எவ்வளவு தூரம் என்பதை குறிப்பிடவில்லை. 2004ம் ஆண்டு கூடுதலாக அமைக்கப்பட்ட இரண்டு மின்கம்பிகள் போர்டிகோ மேல் அமைக்கப்பட்டதுதான் அவரது குற்றச்சாட்டு எனக் கூறியுள்ளார்.

10.3 எதிர்மனுதாரர் பதிலுரையில் திரு. அ. வனஜாமுனியன், தில்லை நகர் அவர்கள் அவரது வீட்டிற்கு முன்பு LT 3 phase 5 wire line செல்லுகிறது என்றும் அது போதிய இடைவெளி இல்லை என்று மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் புகார் அளித்தார். அந்த புகாரின் பேரில் மேற்கண்ட இடத்தை ஆய்வு செய்தபோது அவரது வீட்டிற்கு முன்பு LT 3 phase 5 wire line செல்லுகிறது. அந்த தாழ்வழுத்த மின்பாதை neutralக்கும் வீட்டிற்கும் உள்ள இடைவெளி (Horizontal) தூரம் 90 cm மற்றும் (vertical) தூரம் 1 mtr உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

10.4 மேல்முறையீட்டாளரின் வாதுரையில், தில்லை நகரில் உள்ள இடம் அ.வனஜா முனியன் த/பெ அய்யாகண்ணு பெயரில் 2000ம் ஆண்டு முதல் உள்ளதாகவும், அந்த வீட்டிற்கான மின் இணைப்பு எண்.799 வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். மேற்கண்ட மின் இணைப்பு வழங்கம்பொழுது கூரை வீடு இருந்ததாகவும் பின்பு 2002 ஆம் ஆண்டு RCC வீடு கட்டியதாகவும் தெரிவித்துள்ளார். அதன் பிறகு 12.04.2004 இல் தான் அவரது வீட்டிற்கு அருகில் மின்மாற்றி அமைத்து சட்டத்திற்கு முரணாக பழைய விரோதத்தினை மனதில் வைத்துக்கொண்டு கூடுதலாக இரண்டு மின் கம்பிகள்அமைத்துள்ளதாக வாதிட்டுள்ளார்.

10.5. எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் 2000ம் ஆண்டே அந்த மின்பாதை அமைக்கப்பட்டு விட்டதாகவும் அதற்கு பின்புதான் மனுதாரர் உரிய அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டி உள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்கல் விதி தொகுப்பு விதி 5(6)ன் படி மனுதாரர் தாழ்வழுத்த மின்பாதை மாற்றி அமைப்பதற்கு விண்ணப்பம் கொடுத்தால் பங்களிப்பு முறையில் மதிப்பீடு தயாரித்து மேல் அனுமதி பெற்று அனுமதி தொகையை திரு. அ. வனஜா முனியன் அவர்கள் செலுத்தினால் சைடு ஆரம் போட்டு தாழ்வழுத்த மின்பாதையை போதிய இடைவெளி அமைத்து வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

10.6 மேல்முறையீட்டாளர் 2004–ம் ஆண்டுதான் கூடுதலாக இரண்டு மின்பாதை அமைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். ஆனால் எதிர்மனுதாரர் 2000–ம் ஆண்டே அதாவது மேல்முறையீட்டாளர் கட்டிடம் கட்டுவதற்கு முன்பே அந்த மின்பாதை அமைக்கப்பட்டு விட்டதாக தெரிவித்துள்ளார்.

10.7 இதுசம்பந்தமாக மேல்முறையீட்டாளரின் 07.09.2007 நாளிட்ட கடிதத்திற்கு உதவி மின் பொறியாளர், இயக்குதலும் பராமரிப்பும், புவனகிரி அவர்களின் 03.10.2007 நாளிட்ட பதில் கடிதத்தை ஆராய விரும்புகிறேன்.

*“ த.மி.வா*

*அனுப்புநர்*
*உதவி மின் பொறியாளர்*
*இயக்குதலும் பராமரிப்பும்*
*தமிழ்நாடு மின்சார வாரியம்*
*புவனகிரி **608 601.***

*பெறுதல்*
*திரு. அ. வனஜாமுனியன்,*
*No.**5**, தில்லை நகர்,*
*புவனகிரி & அஞ்சல்,*
*சிதம்பரம் வட்டம்*

*க.எண்.உ.மி.பொ/இ.ப/புவன/கோ.புகார்/க.எண்.**246/07**, நாள் **3.10.07.***
*அய்யா,*

*பொருள்: மின்சாரம் – முன்பே line இழுக்கப்பட்ட கம்பிகளை மாற்றி அமைத்து தருதல் – தொடர்பாக.*
*பார்வை : கடித நாள் 7.9.2007*

*பார்வையின் மூலம் பெறப்பட்ட கடிதத்திற்கு பின்வருமாறு பதில் தெரிவித்து கொள்ளப்படுகிறது. தங்கள் வீட்டிற்கு மின் இணைப்பு கொடுக்க புதியதாக மின்பாதை அமைத்து மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அந்த சமயத்தில் தங்கள் மின்இணைப்பு வேண்டிய பகுதி புதிய நகராக இருந்ததால் சாலை ஓரத்தில் மின் கம்பம் நட்டு வீட்டிற்கு பாதிப்பு இல்லாத வகையில் மேலும், புதிய நகராக இருந்த காரணத்தால் ரோட்டிற்கு போதுமான இடம் கொடுத்து கம்பம் நட்டு கம்பிகள் இழுத்து தங்கள் வீட்டிற்கு மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.*

*இந்த நிலையில் கடந்த **2004**ம் ஆண்டு தாங்கள் குடியிருந்து வரும் தில்லை நகரின் நலன் கருதி அங்கு ஒரு மின்மாற்றி அமைக்க மதிப்பீடு போட்டு அனுமதி பெறப்பட்டு அனுமதி படி அந்த தில்லை நகரில் ஒரு மின்மாற்றி அமைத்து கடந்த **12.4.2004**ந் தேதி மின்மாற்றி இயக்கி மின்சாரம் தங்கள் நகருக்கு தரப்பட்டது. அப்போது தங்கள் வீட்டிற்கு மின்இணைப்பு கொடுக்க இழுக்கப்பட்ட அதே கம்பத்தில் மேலும் இரண்டு கம்பிகள் வீட்டிற்கு இடையூறு இல்லாத வகையில் கம்பிகள் இழுத்து மின்சாரம் **12.4.2004**ந்தேதி தரப்பட்டது.*

*இந்த நிலையில் நீங்கள் ஊருக்கு சென்ற சமயத்தில் திடீர் என மின்மாற்றி அமைத்து இரண்டு கம்பிகள் இருந்ததை நான்கு கம்பிகள் உள்ள line மாற்றி விட்டதாக கூறுகின்றீர்கள். அதுபோல் **2005**ல் நடைபெறவில்லை. மேலும், மின்மாற்றி தங்கள் நகரில் தங்கள் தெருவில் அமைத்த சமயம் அந்த தெருவில் உள்ள அனைவருக்கும் தெரிந்து இருக்க கூடும். தங்களுக்கும் தெரிந்து இருக்ககூடும். திடீர் என மின்மாற்றி அமைக்கவில்லை எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*தங்கள் வீட்டிற்கு அருகில் செல்லும் மின்பாதை தங்கள் வீட்டிற்கு இடையூராக இருப்பதாக தாங்கள் கருதுவீர்கள் என நினைத்தால் அந்த மின்பாதை மாற்றுவதற்கு உண்டான செலவு தொகையை கட்ட சம்மத கடிதம் கொடுத்து விண்ணப்ப கட்டணமாக ரூ.**500/–** செலுத்தி பின் மதிப்பீடு தயாரித்து அனுமதி பெறப்பட்டு மதிப்பீட்டின் படி செலுத்த வேண்டிய தொகையை செலுத்தினால் மின்பாதையை மாற்றி தரமுடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*Sd/xxxx 4.10.07*
*உதவி மின் பொறியாளர்*
*இயக்குதலும் பராமரிப்பும்*
*தமிழ்நாடு மின்சார வாரியம்*
*புவனகிரி – **608 601** ”*

மேற்கண்ட கடிதத்தின் படி **12.04.2004**–ம் ஆண்டுதான் மின்மாற்றி புதியதாக நிறுவி மேல் முறையீட்டாளரின் வீட்டின் முன்பாக மின்பாதை அமைக்கப்பட்டுள்ளதாக உரிமதாரரின் உதவி மின் பொறியாளர் தெரிவித்துள்ளார். எனவே, **2002** –ல் RCC கட்டிடம் கட்டிய பிறகுதான் **2004**–ம் ஆண்டு கூடுதலாக இரண்டு மின்பாதை எதிர்மனுதாரரால் அமைக்கப்பட்டதாக தெரிவித்துள்ள மேல்முறையீட்டாளரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக இருக்கிறது.

**10.8** மேலும் மேல்முறையீட்டாளர் அவரது வீட்டுக்கு முன் **11** KV மின் அழுத்தமுள்ள கூடுதல் மின்கம்பிகள் அமைக்கப்படும்போது, **4** அடி தூரம் இருக்க வேண்டும் என்பதற்கு எதிராக அவரது வீட்டு போர்ட்டிகோ மேல் கூடுதல் மின்கம்பிகள் மின்துறை கட்டத்திற்கு விரோதமாக அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் புகார் அளித்ததின் பேரில் மேற்கண்ட இடத்தை எதிர்மனுதாரர் ஆய்வு செய்தபோது அவரது வீட்டிற்கு முன்பு LT **3** phase **5** wire line செல்லுகிறது என்றும் அந்த தாழ்வழுத்த மின்பாதை neutralக்கும் வீட்டிற்கும் உள்ள இடைவெளி (Horizontal) தூரம் **90** cm மற்றும் (vertical) தூரம் **1** mtr உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**10.9** இது சம்பந்தமாக நான் The Indian Electricityy Rule **1956**ன் விதி **79** ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

“79. Clearances from buildings of low and medium voltage lines and service lines-

(1) Where a low or medium voltage, overhead line passes above or adjacent to or terminates on any building, the following minimum clearances from any accessible point, on the basis of maximum sag, shall be observed: -

(a) For any flat roof, open balcony, verandah roof and lean-to-roof-

(i) When the line passes above the building a vertical clearance of 2.5 metres from the highest point, and (ii) When the line passes adjacent to the building a horizontal clearance of 1.2 metres from the nearest point, and

(b) For pitched roof-

(i) When the line passes above the building a vertical clearance of 2.5 metres immediately under the lines, and (ii) When the line passes adjacent to the building a horizontal clearance of 1.2 metres.

(2) Any conductor so situated as to have a clearance less than that specified in sub-rule (1) shall be adequately insulated and shall be attached at suitable intervals to a bare earthed bearer wire having a breaking strength of not less than 350 kg. (3) The horizontal clearance shall be measured when the line is at a maximum deflection from the vertical due to wind pressure.

Explanation- For the purpose of this rule, expression “building” shall be deemed to include any structure, whether permanent or temporary

10.10 மேற்கண்ட விதி 79ஐ கூர்ந்து பார்க்கும்பொழுது நாம் அறிவது, ஒரு கட்டிடத்திற்கு அதன் மேலேயோ அல்லது பக்கவாட்டிலோ செல்லும் தாழ்வழுத்த மின்சார கம்பிக்கும் கீழ்கண்ட இடைவெளி இருக்க வேண்டும் என்று தெரிகிறது.

(i) மின்சார கம்பி கட்டிடத்தின் மேலே சென்றால் கட்டிடத்தின்
உயர்ந்த இடத்திலிருந்து மின்கம்பிக்கு இடையிலுள்ள செங்குத்து உயரம் (vertical clearance) —— 2.5 மீட்டர் (8 அடி)

(ii) கட்டிடத்திற்கும் அதன் அருகில் பக்கவாட்டில் செல்லும் — 1.2 மீட்டர்
தாழ்வழுத்த மின்சார கம்பிக்கும் இடையிலுள்ள (4 அடி)
இடைவெளி (Horizontal clerance)

10.11 இந்த வழக்கில் வீட்டின் கட்டிடத்திற்கும் அந்த தாழ்வழுத்த மின்பாதை neutralக்கும் வீட்டிற்கும் உள்ள இடைவெளி (Horizontal) தூரம் 90 cm மற்றும் (vertical) தூரம் 1 Mtr உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

10.12 மேற்கண்ட அளவீடுகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது கட்டிடத்திற்கும் மின்பாதைக்கும் இடையே உள்ள தூரம் 90 cm மற்றும் (vertical) தூரம் 1 Mtr உள்ளதாக தெரிகிறது. ஆனால் I.E. RULEன் விதி 79ன் படி மின்பாதைக்கும் கட்டிடத்திற்கு இடையிலுள்ள HORIZONTAL DISTANCE 1.2 மீட்டர் (4 அடி) ஆக இருக்க வேண்டும். இது, தேவையான அளவுக்கு குறைவு என்பதால் மின்பாதைக்கும் வீட்டிற்கும் போதிய இடைவெளி இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

10.13 மேல்முறையீட்டாளர் 2002—ல் குடியேறிய பின்புதான் எதிர்மனுதாரரால் 12.4.2004 ஆம் ஆண்டு மின்மாற்றி அமைத்து புதியதாக இரண்டு தாழ்வழுத்த மின் பாதை மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கு முன்பு தேவையான இடைவெளியில்லாமல் அமைக்கப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டாளரின் வாதமான அவரது வீட்டுக்கு மிக அருகில் இழுக்கப்பட்டுள்ள கூடுதல் இரண்டு மின் கம்பிகளை வாரிய செலவில் அகற்றி மாற்றித்தரவேண்டும் என்பது எனக்கு ஏற்புடையதாக இருக்கிறது.

11. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>

11.1 மேல்முறையீட்டாளர் 2004 முதல் அவருக்கு ஏற்பட்ட செலவு மற்றும் எதிர்மனுதாரரின் தவறான பணி செய்கையால் அவருக்கு வரக்கூடிய வருமானம், ஏற்பட்ட சம்பள இழப்பு மற்றும் மன உளைச்சலுக்குரிய பரிகாரம் ரூ.10 லட்சம் பெற்றுத்தர கோரியுள்ளார்.

**11.2** இது சம்பந்தமாக நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 7(11)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"7. ......................*

*..............................*

*(11) குறை முறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத் திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக்கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

**11.3** மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும்பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறைஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என தெரிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது.

**11.4** எனவே, ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்ககான ஒழுங்குமுறை விதிகளில் வழி இல்லை என்று தெரிகிறது.

**11.5** இந்த வழக்கில் கோரப்பட்டுள்ள நஷ்டஈடான ரூ.10,00,000/– என்பது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் குறைபாடு சம்பந்தமானது அல்ல என்பதால் மேற்கண்ட நஷ்டஈடு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12.** **<u>முடிவுரை</u>**

**12.1** பத்தி 10.13 ல் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு முன்பாக உரிமதாரரால் புதியதாக அமைக்கப்பட்ட இரண்டு தாழ்வழுத்த மின் பாதை The Indian Electricityy Rule 1956ன் விதி 79 வது பிரிவின்படி, தகுந்த இடைவெளியில்லாமல் அமைக்கப்பட்டுள்ளதால் கூடுதல் இரண்டு மின் கம்பிகளை உரிமதாரர் செலவில் அகற்றி மாற்றித்தரவேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12.2** மேற்கண்ட தீர்வினை இந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் நிறைவேற்றியமைக்கான அறிக்கையை (compliance report)–ஐ 45 நாட்களுக்குள் அனுப்ப வேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது.

**12.3** பத்தி எண்.11.5 உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் நஷ்டஈடு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12.4** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.23/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
1) திரு. அ. வனஜாமுனியன்,
எண்.5, தில்லை நகர்,
புவனகிரி தாலுகா,
கடலூர்–608 601.

2) உதவி பொறியாளர்,
கடலூர் மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
6/14, D–1, விருத்தாச்சலம் மெயின் ரோடு,
மேல் புவனகிரி–608 601.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கடலூர் மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
13ஏ, நேதாஜி ரோடு, கடலூர்–607 001.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.